PR/2018/16/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

மே 11, 2018

<u>ஊடக அறிக்கை</u>

**ஜப்பானிய உதவியுடன் தேசிய வீதி வலைப்பின்னலிலுள்ள பத்து பெரிய பாலங்கள் புனரமைப்பு**

கட்டுமான ரீதியில் பலவீனமாக காணப்பட்ட பத்து பெரிய பாலங்கள் தேசிய வீதிக் கட்டமைப்பின் முதலாவது பொதியின் பெரும் பாலங்கள் நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஜப்பானிய உதவியுடன் புனரமைக்கப்பட்டு மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. இதனைச் சிறப்பிக்கும் சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சி இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அதி மேதகு கெனிச்சி சுகனுமா மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு ஆகிவற்றின் அனுசரணையில் 2018 மே 11ம்திகதி மாத்தறையிலுள்ள பொல்வதுமோதர பாலத்தில் நடைபெற்றது. மேலும் திட்டமுகாமைத்துவம், இளைஞர் விவகாரம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க மற்றும் இலங்கை அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இலங்கையில் வீதிக் கட்டமைப்பினை இடையூறுகளின்றி சுமூகமாக்குதல் மற்றும் அதிகரித்தவரும் வீதிப் போக்குவரத்திற்கான கேள்விகளை சந்திக்கும் நோக்குடன் சர்வதேச கூட்டுறவிற்கான ஜப்பானிய முகவர் அமைப்பான ஜெய்க்காவினூடாக இந்த திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் 12,381 மில்லியன் ஜப்பானிய யென்களை ( 17,870 மில்லியன் இலங்கை ரூபா) வழங்கியுள்ளது. பொல்வதுமோதர (2 பாலங்கள்) , கொய்யாபண, கதலுவ, பொல்வத்த வெல்லமடம, கொலேதன்த, கிகிம்பி எல, டினிபிடிய மற்றும் தெனகம ஆகியவையே புனரமைக்கப்பட்டுள்ள 10 பாலங்களும் ஆகும். வீதிப் பாவனையாளர்களுக்கும் அருகில் வாழும் சமூகங்களுக்கும் குறைந்த பட்ச இடையூறுகளோடு இந்தப் பாலங்கள் ஜப்பானின் மிகச்சிறந்த தொழில்நுட்பம் மற்றும் முறைமைகளைப் பயன்படுத்தி மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் பாலம் மற்றும் மண்முனை பாலம் உட்பட பல பாலங்களை இலங்கையில் மீள் நிர்மாணம் செய்வதற்கு ஜப்பானிய அரசாங்கம் உதவிசெய்துள்ளது. தற்போது களனி ஆற்றிற்கு குறுக்காக பேலியாகொடையில் நிர்மாணிக்கப்படும் புதிய பாலத்திற்கும் நிதியளிக்கின்றது. இந்த உதவிகள் நாட்டில் சுமூகமான வீதிக் கட்டமைப்பிற்கு உதவும் எனவும் அது இலங்கையின் அபிவிருத்தியையும் பொருளாதார வளர்ச்சியையும் முன்னேற்றும் எனவும் நம்புகின்றோம்.( முற்றும்)

*********************************************************

மேலதீக விபரங்களுக்காக தயதுசெய்து பொருளாதார கூட்டுறவு பகுதியினரை தொடர்புகொள்ளுங்கள் தொலைபேசி: 011-269-3831~3 (ext.224)